விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 116 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 01 வெள்ளிக்கிழமை (14.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் 25ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு

### நீதியமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை எதிர்வரும் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன் வைக்கவுள்ளதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலத்தை கடந்த 4ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்க திட்டமிட்டிருந்ததாக அவர் தெரிவித்தார். 15

## ஆபத்தான சட்டங்களை ஆதரிக்க மாட்டோம்

### மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களுக்கும் ஊடகங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும், ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன ஆதரவு வழங்க மாட்டாது என ஸ்ரீலங்கா பொது 15

## வடக்கில் 700 ஏக்கர் சீனாவுக்கு தாரைவார்ப்பு

### சிறீதரன் எம்.பி தகவல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு குளத்துக்கு தெற்குப் புறமாக 500 ஏக்கர் மற்றும் இயக்கச்சியை அண்மித்த பகுதியில் 200 ஏக்கர் காணியும் சீனாவுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளமை தெரிய வந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

16 மில்.பெறுமதியான

## போதை மாத்திரைகள் மன்னாரில் மீட்பு

(மன்னார்)

மன்னார்- இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் பிரதேச ஊழல் ஒழிப்புப் பிரிவினருடன் இணைந்து மன்னார் சிலாவத்துறை பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை முன்னெடுக்கப் பட்ட சுற்றிவளைப்பின்போது 1 லட்சத்து 11 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட் 15

## நிமோனியா காய்ச்சல் 4 வயது சிறுவன் பலி

### புதுக்குடியிருப்பில் சோகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு உடையார் கட்டு பிரதேசத்தில் வசித்துவந்த நான்கு வயதுடைய சிறுவன் நிமோனியா காய்ச்சலால் பீடிக்கப் பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு சிறுவன் சளிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில், 15

## யாழ்.போதனாவில் குருதிக்கு பெரும் தட்டுப்பாடு

குருதி வழங்க முன்வாருங்கள்



9ஆம் பக்கம் பார்க்க



அனைவருக்கும் இனிய
சித்திரைப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
வலம்புரி குடும்பம்

## சோபகிருது புத்தாண்டு பிறக்கும் நேரம்

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி**
14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.03 மணி

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி**
14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.59 மணி

இந்தியா, ஜப்பான், பிரான்ஸ்

## கடன் மறுசீரமைப்பு தொடர்பான திட்டத்தை இன்று அறிவிக்கவுள்ளன

(கொழும்பு)

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அடுத்த கட்ட திட்டம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 4.30 மணியளவில் அமெரிக்காவின் வோஷிங்டனில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் நிதி அமைச்சர்கள் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத் 15

## மு.வண்டியில் பயணித்தவர் திடீரென உயிரிழப்பு

### முல்லைத்தீவில் சம்பவம்

(முறிகண்டி)

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் ஏ9 வீதியில் ஆண் மாற்றுத்திறனாளி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்ற முச்சக்கரவண்டியில் பயணித்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வாந்தி எடுத்தமையைத் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய சித்திரைப்புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ குமரன் நகை மாளிகை
Sree Kumaran Jewellers

அட்சய திருதியை முன்னிட்டு எம்மிடம்
கொள்வனவு செய்யும் தங்க நகைகளுக்கு
விசேட விலைக்கழிவுடன் 14.04.2023
தொடக்கம் 21.04.2023 வரை
முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்
என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
(C-6351)

இல. 74, பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
021 226 4465
077 873 3482








31ஆம் நாள்
வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 17.03.2023 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்ப குலவிளக்கு

அமரர்
சின்னத்தம்பி செல்லத்துரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (12.04.2023) புதன் கிழமை நடைபெற்றது. அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

10ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

இங்ஙனம்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை வாபஸ் பெறும்படி அரசாங்கத்தை அழுத்துங்கள்

## வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் கோரிக்கை

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விட மிக மோசமான முறையில் தமது பிரஜைகளின் மனித உரிமைகளை மீறத்தக்கதோர் சட்டமூலத்தினை இலங்கை அரசாங்கம் கூர்மதியின்றி முன்மொழிந்திருக்கின்றது.**

எனவே அச்சட்ட மூலத்தை உடனடியாக வாபஸ் பெறும் அதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரயோகத்தை உடனடியாக இடைநிறுத்துமாறும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அதனை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும்படி 450 இற்கும் மேற்பட்ட கல்வியியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை வாபஸ் பெறும்படி அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்குமாறு வலியுறுத்தி சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், சுகாதாரத்துறை அதிகாரிகள், மதகுருமார்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், தொழிற் சங்கவாதிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த 450 இற்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டு, இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் கடந்த மார்ச் மாத இறுதியில் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இச்சட்டமூலம் இம்மாத இறுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மிக மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் நோக்கில் கொண்டு வரப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது இலங்கையின் ஜனநாயகத்துக்குப் பாரதூரமான அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

இப்புதிய சட்டமூலமானது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளைத் தக்க வைத்திருப்பதுடன், அதனை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

இது ஜனநாயகத்தில் பொது மக்களின் முனைப்பான பங்கேற்புக்கான இடைவெளியைச் சுருக்குவதுடன், சமூதாயங்களை அரசின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தி, அரசை இராணுவமயப்படுத்தும்.

ஆகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கான கடப்பாடுகளை, பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் போன்ற பிறிதொரு மிக மோசமான சட்டத்தைத் திருட்டுத்தனமாக அறிமுகப்படுத்துவதற்காகப் பயன்படுத்த முடியாது.

கடந்த 2018 ஆம் ஆண்டு பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கும் கடந்த 2022 ஆம் ஆண்டு அச்சட்டத்தை மறுசீரமைப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான அழுத்தங்களைச் சமாளிக்கும் நோக்கிலான "ஏமாற்று" நடவடிக்கைகளே தவிர, அவை மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வு காணும் உண்மையான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவையல்ல.

பயங்கரவாதத் தடைச் சட்டம் கட்டாயமாக நீக்கப்படவேண்டும் என்பதும் அது அதிவிசேட நிறைவேற்றதிகாரங்களைக் கொண்ட எந்தவொரு சட்ட வாக்கத்தினைக் கொண்டும் பதிலீடு செய்யப்படக்கூடாது என்பதும் எமது தெளிவானதும் தொடர்ச்சியானதுமான நிலைப்பாடாகும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

## குடும்ப சுகாதார சேவைகள் பணியகம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஐந்து வயதுக்குட்பட்ட எடை குறைந்த குழந்தைகள் ஒரு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூற்று அறுபத்தைந்து பேர் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

குடும்பச் சுகாதார சேவைகள் பணியகத்தின் தரவு அறிக்கைகளின்படி, இந்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குள், இந்தச் சதவீதம் 15.5 சதவீதமாக உள்ளது.

ஐந்து வயதுக்குட்பட்ட எடை குறைந்த குழந்தைகள் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவாகியுள்ளன.

வயது தொடர்பான எடை இழப்பு குறைந்த எடை என்றும், குட்டை மற்றும் மெலிந்த குழந்தைகள் எடை குறைவான குழந்தைகள் என்றும் அடையாளம் காணப்படுகிறார்கள்.

குடும்ப சுகாதார சேவைகள் அலுவலகத்தின் தரவு அறிக்கைகளின் படி, நகர்ப்புறம், கிராமம். மற்றும் தோட்டங்கள் என அனைத்துத் துறைகளிலிருந்தும் எடை குறைந்த குழந்தைகளின் அறிக்கை அதிகரித்து வருகின்றன.

உணவுப் பொருட்களின் விலை யேற்றம் காரணமாக ஆபத்துக் குழுக்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கிடையில் ஊட்டச்சத்துக் குறைபாடுகள் உருவாகி வருவதால் எடை குறைந்த குழந் தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. (நி)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

⇨ A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
⇨ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
⇨ கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
⇨ A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

(52249)

**076 436 5814,076 739 0413**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் (நிலப்பரப்பு)
36 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பரப்பின் விலை (125,000/=) ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.
- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி

(15249)

**076 755 8606**
**077 638 5683**

## இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

### 30% விலைக்கழிவில்

பான்சிப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், தையல் உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள், கவறிங் நகைகள், கிறீம் வகைகள், விளையாட்டுப் பொருட்கள், சில்வர் வகைகள், கிளாஸ் வகைகள், அலுமினியப் பொருட்கள், மாபிள் வகைகள் அனைத்துப் பொருட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



## சரவணபவன் பென்சி கவுஸ்

இல.26/1,
ஜும்மா பள்ளிவாசல் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்
தே.லலித்தாசன்(கரன்)

T.P:- 021 315 5900,077 488 3354

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 39 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15249)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே போட்டியில் பல சாதனைகள் படைத்த ரோஹித் சர்மா







ஐ.பி.எல் தொடரின் 16 ஆவது லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியும் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியும் மோதின. இந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி டில்லியை வீழ்த்தி இந்த தொடரோட முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

ஒரு போட்டியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி மற்றும் ரோகித் சர்மா பல சாதனைகளை படைத்து ள்ளனர். ஐ.பி.எல் தொடரில் ரோகித் சர்மா கடைசி 25 போட்டிகளில் முதல் அரை சதம் விளாசியுள்ளார்.

இந்தத் தொடரோட முதல் அரைசதம். ஐ.பி.எல் தொடரில் இது அவருக்கு 41-வது அரைசதம் ஆகும். டில்லி கேபிட்டல்ஸ் அணிக்கு எதிராக 6 ஆவது அரை சதம். அருண் ஜெட்லி மைதானத்தில் 3 ஆவது ஐ.பி.ல் அரைசதம்.

இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றதன் மூலம் ஐ.பி.எல் போட்டியில் அதிகமுறை ஆட்டநாயகன் விருதை பெற்றவர் என்ற சாதனையை ரோகித் சர்மா (19 முறை) படைத்துள்ளார்.

2 ஆவது இடத்தில் டோனி (17 முறை) உள்ளார். இந்த போட்டியில் டில்லி அணியை ஓல் அவுட் செய்ததன் மூலமாக 31 முறை எதிரணியை ஓல் அவுட் செய்த அணி என்ற சாதனையை மும்பை அணி புடைத்துள்ளது.

ஐ.பி.எல் தொடரில் அதிக முறை கடைசி பந்தில் வெற்றி பெற்ற அணிகள் பட்டியலில் மும்பை இந்தியன்ஸ் அணி (7 முறை) 2-வது இடத்தில் உள்ளது. முதல் இடத்தில் சென்னை அணி (8 முறை) உள்ளது. (4)

# சென்னை அணி கப்டனாக டோனிக்கு 200 ஆவது போட்டி

## நினைவுப்பரிசு வழங்கிய சீனிவாசன்




சென்னை அணியின் கப்டன் மகேந்திர சிங் டோனி நேற்று முன்தினம் ஐ.பி.எல் கிரிக்கெட்டில் சிறப்பான மைல்கல்லை எட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ் போட்டியில் சென்னை கப்டனாக டோனிக்கு 200 ஆவது போட்டியாகும். 2010, 2011, 2018 மற்றும் 2021 என 4 முறை டோனி தலைமையில் சென்னை சுப்பர் கிங்ஸ் சம்பியன்பட்டம் வென்றுள்ளது.

199 போட்டிகளில் டோனியின் தலைமையில் 120 வெற்றிகளை சென்னை அணி பெற்றுள்ளது. 78 போட்டிகளில் தோல்வி மற்றும் 1 போட்டியில் முடிவு எட்டப்படவில்லை.

இந்நிலையில், சி.எஸ்.கே கப்டனாக 200 ஆவது போட்டியில் களமிறங்கிய எம்.எஸ். டோனிக்கு சி.எஸ்.கே. அணியின் உரிமையாளர் சீனிவாசன் நினைவுப் பரிசு வழங்கினார். அணி வீரர்களும் டோனிக்கு வாழ்த்து தெரிவித்தனர். (4)

# தகுதிகாண் சுற்றுக்களில் பங்கேற்கும் தகுதியை இழந்தது இலங்கை

## சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம்

முக்கியமான இரண்டு தொடர்களின் தகுதிகாண் சுற்றுகளில் பங்கேற்பதற்கான தகுதியை இலங்கை அணி இழந்துள்ளதாக இலங்கை கால்பந்து சம்மேளனத்துக்கு சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.




இலங்கையின் ஆண்கள் கால்பந்தாட்ட அணி, 2024 பரிஸ் ஒலிம்பிக் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான ஆசிய தகுதிகாண் போட்டி மற்றும் ஆசிய கால்பந்து கூட்டமைப்பின் 23 வயதுக்குட்பட்ட கட்டார் ஆசியக் கிண்ணத் தகுதிகாண் போட்டி ஆகியவற்றில் பங்கேற்க தகுதி இழந்துள்ளதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உறுப்புரிமையை, கடந்த ஜனவரி 21 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தியுள்ளது.

குறித்த தடை நீங்கும் வரை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் எந்தொரு சர்வதேச போட்டிகளிலும் பங்கேற்க முடியாது என அறிவிக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை அமைச்சரால் நடத்தப்பட்ட தேர்தலில் மூன்றாம் தரப்பின் தலையீடு இடம்பெற்றதாக இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் மே 25 ஆம் திகதி குறித்த போட்டிகளுக்கான அட்டவணை தயாரிக்கப்படவுள்ளதாகவும் அதில் இலங்கை ஆண்கள் கால்பந்தாட்ட அணி இடம் பெறாது எனவும் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது. (4)

# ஐ.சி.சி கிரிக்கெட் தரவரிசை தொடர்ந்து முதலிடத்தில் சூர்யகுமார்




சர்வதேச கிரிக்கெட் கவுன்சில், இருபது-20 ஓவர் போட்டி கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை நேற்று முன்தினம் வெளி யிட்டது.

இதன்படி பேட்ஸ்மேன் தர வரிசையில் ஐ.பி.எல். போட்டியில் தொடர்ந்து சொதப்பி வரும் இந்திய அதிரடி ஆட்டக்காரர் சூர்யகுமார் யாதவ் முதலிடத்தில் நீடிக்கிறார்.

பாகிஸ்தான் விக்கெட் கீப்பர் முகமது ரிஸ்வான் 2 ஆவது இடத்திலும், கேப்டன் பாபர் அசாம் 3 ஆவது இடத்திலும், தென் ஆபிரிக்க வீரர் மார்க்ரம் 4 ஆவது இடத்திலும், நியூசிலாந்தின் டிவான் கான்வே 5 ஆவது இடத்திலும் உள்ளனர். விராட் கோலி 15 ஆவது இடத்தில் தொடருகிறார்.

பந்து வீச்சாளர் தர வரிசையில் ஆப்கானிஸ்தான் வீரர்கள் ரஷித் கான், பசல்ஹக் பரூக்கி, அவுஸ்திரேலியாவின் ஹேசில்வுட், இலங்கையின் ஹசரங்கா, தீக்ஷனா ஆகியோர் முறையே முதல் 5 இடங்களில் மாற்றமின்றி தொடருகின்றனர். (4)

# அயர்லாந்திற்கு எதிரான டெஸ்ட் இலங்கை அணி அறிவிப்பு




அயர்லாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

திமுத் கருணாரத்ன தலைமையிலான 15 பேர் கொண்ட அணிக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஓய்வளிக்கப்பட்டிருந்த சுழற்பந்து வீச்சாளர் லசித் எம்புல்தெனிய மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்ட நிலையில், விக்கெட் காப்பாளர் சதீர சமரவிக்ரம மற்றும் சுழற்பந்து வீச்சாளர் துஷான் ஹேமந்த ஆகியோர் புதிய வீரர்களாக அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எனினும், நிறைவடைந்த நியூசிலாந்து டெஸ்ட் தொடருக்கு பெயரிடப்பட்ட நிரோஷன் டிக்வெல்ல, ஒஷத பெர்னாண்டோ மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகியோர் இந்த டெஸ்ட் அணியில் இடம்பிடிக்கவில்லை.

மேலும், வேகப்பந்து வீச்சாளர்களான கசுன் ராஜித மற்றும் லஹிரு குமார ஆகியோருக்கும் இந்தப் போட்டியில் இருந்து ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DLB
அபிவிருத்தி லொத்தர்



(C-1978)

அபிவிருத்தி லொத்தர் சபையின்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும், விற்பனை முகவர்களுக்கும்,
இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும்

# இனிய – ஆரோக்கியமான
## புத்தாண்டு வாழ்த்துக்கள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.dlb.lk

# கட்டுப்பாட்டை இழந்த கன்ரர் கடைகளை மோதித் தள்ளியது

## ஆவரங்காலில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியில் நேற்று அதிகாலை வேகக்கட்டுப்பாட்டை இழந்த கன்ரர் ரக வாகனம் இரண்டு கடைகளை மோதித் தள்ளியது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி அதிகாலை இறைச்சிக் கோழிகளை ஏற்றியவாறு பயணித்த வாகனத்தின் முன்பக்க ரயர் திடீரென காற்று போனதால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து அருகே உள்ள ரயர் கடை மற்றும் தேங்காய் விற்பனை செய்யும் கடை ஆகியவற்றின் தொட்டிகள் மதில்ச்சுவர்கள் என்பவற்றை மோதித் தள்ளி கனரர் வாகனமும் முற்றாக சேதமடைந்தது.


இதன் போது குறித்த வாகனத்தில் பயணம் செய்த சாரதியின் உதவியாளர்கள் இருவர் கைகள் மற்றும் தலைகளில் காயங்களுக்குள்ளாகி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உழவு இயந்திரம் ஒன்றின் உதவியுடன் கடையினுள் புகுந்த வாகனத்தினை பிரதேசவாசிகள் மீட்டனர்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-33)

# கரவெட்டி உச்சில் மாணிக்கவலை குளத்தை ஆக்கிரமிக்கும் முதலைகள்

## அப்பகுதி மக்கள் அச்சம்



(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டி உச்சில் மாணிக்கவலை குளத்தில் முதலைகளின் ஆக்கிரமிப்பால் கால்நடைகள் பல இரையாகியுள்ளதுடன், மக்களும் பலர் அச்சத்துடன் செல்வதாகவும் அப்பகுதி தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கூட குறித்த குளத்தில் முதலைக்கு மாடு ஒன்று இரையாகியுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதியிலுள்ள மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 5 இற்கும் மேற்பட்ட முதலைகள் குளத்தை ஆக்கிரமிப்பு செய்து வருகின்றன. இவற்றினால் தொடர்ந்து கால்நடைகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதரமும் பாதிக்கபடுகின்றன. மேலும் மக்களும் குளத்தை அச்சத்துடனேயே பயன்படுத்தி வருகின்றனர்.

ஆகவே கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மிக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-6-60-104)



கிளிநொச்சி-உருத்திரபுரம் அன்னையின் கரங்கள் சிறுவர் இல்ல சிறார்களுக்கு அண்மையில் சிறிலங்கா யுனைற் அமைப்பினால் தலைமைத்துவம்.பிரச்சினைகளை கையாளும் வழிமுறை மற்றும் மகிழ்ச்சிக்கான வழிமுறை உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

குறித்த தினத்தில் "மகிழ்ச்சிக்கான பாதை" என்ற நிறுவனத்தின் புத்தகங்களும் சிறார்களுக்கு வழங்கப்பட்டு செயலமர்வு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம்:-சுபேசன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 380 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 170 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 |
| தக்காளி | 200 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| கோவா | 150 | 140 | 120 | 200 |
| கரட் | 160 | 200 | 200 | 250 |
| பூசணி | 60 | 70 | 60 | 40 |
| புடோல் | 150 | 130 | 160 | 160 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 300 |
| வெண்டைக்காய் | 240 | 280 | 180 | 250 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 280 | 200 | 200 | 250 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 | 350 |
| பீற்றூட் | 120 | 180 | 160 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 700 | 1000 |
| போஞ்சி | 280 | 250 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 320 | 360 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 350 | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 350 | 280 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | 400 |
| முள்ளங்கி | 60 | 120 | — | 280 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 30 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | — | 180 |

# இராசிபலன்

14.04.2023
சித்திரை 01, வெள்ளிக்கிழமை
நவமி முன்னிரவு 10.10 மணிவரை
உத்தராடம் முற்பகல் 8.12 மணிவரை

சுபநேரம் -6.05-7.35 மணிவரை
இராகு காலம்-10.35-12.05 மணிவரை
தமிழ் சிங்கள புதுவருடம்

சந்திராஷ்டமம் - திருவாதிரை, புனர்பூசம்

வளவன்



மேஷம்

வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களின் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.



கடகம்

சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



துலாம்

சென்ற இடங்களில் சிறிதளவு ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு, சுபகாரியச் செலவுகள் மேலோங்கும் நாள்,வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



மகரம்

தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.



ரிஷபம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும்.



சிம்மம்

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,காரிய அனுகூலமுண்டு.



விருச்சிகம்

பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்கள் நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போசன சுகமுண்டு.



கும்பம்

மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், சோம்பலை விலக்குவது நல்லது, புதிய பொறுப்புக்களை தள்ளிப் போடுவது நல்லது.



மிதுனம்

உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வரவைக் காட்டிலும் செலவுகள் கூடலாம், வேலைச் சுமை கூடும், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.



கன்னி

பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் வழியில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.



தனுசு

வாக்கு மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.



மீனம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, முன்னேற்றமான பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

தூய மனச்சான்று உடையவர்கள்தான் நல்வாழ்வு பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டு தின சிறப்பிதழ்



## சோபனங்கள் பொலிவுறும் சோபகிருது வருடப்பிறப்பு

நலன்கள் யாவும் நிறைந்த சுக்கிர ஓரையில் செவ்வாய் சூக்கும ஓரையில் சாத்வீக குறை வேளையில் சூக்கும பட்சி அரசுத் தொழில் செய்யும் புண்ணிய காலத்தில் திருவோண நட்சத்திரத்தில் இரண்டாம் பாதத்தில் பிற்பகல் 02 மணி 03 நிமிடத்தில் புதிய சோபகிருது வருடம் மங்களகரமாகப் பிறக்கின்றது.

இப்புதிய வருடப்பிறப்பினால் உலகெங்கும் வாழும் சைவசமய அன்பர்கள் சோபனங்கள் யாவும் விரைவாக பெற்று புதுப்பொலிவு பெறுவார்கள். வேண்டுவார் வேண்டிடும் வரங்கள் யாவும் இறையருளினால் சித்திக்கும். கல்வியும் செல்வமும் மேன்மையுறும். திருமணங்கள் நிறைவாகக் கைகூடும். உலகெங்கும் அமைதியும் நற்பண்புகளும் மேலோங்கும். விவசாயமும் ஏனைய தொழிற் துறைகளும் மேன்மை பெற தேவையான பருவகாலங்கள் சிறப்புற்று அமைந்து பொருளாதார அபிவிருத்தி நிறைவாக ஏற்படும். இளம் சந்ததியினரின் சிந்தையிலே சாத்வீக குணங்கள் மேலோங்கும். உலக மக்கள் அனைவரதும் உடல், உள, ஆரோக்கியத்துடன் கூடிய சுபீட்சமான, நிறைவான,வளமான வாழ்வு மலர நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்வுறுகின்றோம்.

**கு.ஜெகதீஸ்வரக்குருக்கள், தலைவர்,**
**சர்வதேச இந்துமதக்குருமார் ஒன்றியம்.**



## செஞ்சொற் செல்வரின் புதுவருட ஆசிச் செய்தி

அன்பர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக. சோபகிருது வருடம் எங்கள் சோகங்களை தீர்க்கும் வருடமாக அமைய வேண்டும் என அனைவரும் பிரார்த்திப்போம். புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் அனைத்து சைவ அன்பர்களும் திருக்கோவில்களுக்குச் சென்று குடும்பமாக பிரார்த்தனை செய்யுங்கள். வீட்டிலும் மூத்தோரை நாடி அனைவரும் வீழ்ந்து வணங்கி அவர்களின் பரிபூரணமான ஆசியைப் பெற்றுக்கொள்ளுங்கள். உற்றார், உறவினர், நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று அன்பைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உறவினர்களின் உறு துணையை வளர்த்துக் கொள்ளுங்கள். எங்கள் குழந்தைகள் இயல்பாகவே எமது பண்பாட்டைக் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்துங்கள்.

புதுவருடம் பிறக்கின்ற போது எம் உள்ளத்தில் புதிய சிந்தனைகளை தோற்றுவித்து அவை வெற்றி பெறுவதற்கு வழி செய்யுங்கள். கோபங்களை மறந்து அன்பைப் பெருக்கி அனைவரையும் ஆற்றுப் படுத்துங்கள். எங்கள் ஆதிச் சமயமாகிய சைவ சமயத்துக்கு வரும் இடையூறுகளைக் கண்டு அச்சப்படாதீர்கள். எங்கள் சமயம் என்றும் நிரந்தரமாக நிலைபெற்றுச் சிறக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே புத்தாண்டு நாளில் நாம் வணங்கும் தெய்வங்களை நன்றாக வேண்டுவோம். எங்களைச் சூழ்ந்துள்ள இடையூறுகள் அற்றுப்போக வேண்டுவோம். அனைத்து தமிழ் தலைவர்களும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக செயற்பட பிரார்த்திப்போம். வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள அன்பர்கள் அனைவரும் நலம்பெற இறைவனை மன்றாடுவோம்: இப்புதிய ஆண்டு எம்மண்ணில் நல்லவை நடைபெற மீண்டும் பிரார்த்தித்து அனைவருக்கும் நல்லாசிகள் கூறி அமைகிறேன்.


**செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறுதிருமுருகன்,**
**தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தலைவர்,சிவபூமி அறக்கட்டளை,**
**உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.**

## அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் கிடைக்கட்டும்

ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்ட காலப் பகுதியாகும். பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றிவர 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடங்கள், 48 நொடிகள் ஆகின்றது. இதுவே தமிழ் வருடத்தினதும் கால அளவாகும். சூரியன் மேச இராசியில் பிரவேசிக்கும்போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது. ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது.

இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாள்,நேரம் கணிக்கப்படுகிறது.சோபகிருது எனும் மங்கல நாமத்துடன் புதிய வருடம் உதயமாகிறது இவ்வருடம் எமதுமக்களினதும் ஏனைய சமூகத்தினதும் அனைத்து இடர்களும் நீங்க வேண்டும். ஒவ்வொருவரினதும் சமூகத்தினதும் தனித்துவம், வழிபாட்டுச் சுதந்திரம், கருத்துச்சுதந்திரம்,பண்பாட்டு விழுமியங்கள் மதித்து பேணப்பட வேண்டும்.இவ்வாறான நிலை பேணப்பட்டு அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் பெற்று சுபீட்சமான இன்ப வாழ்வும் வளர்ச்சியும் உயர்ச்சியும் பெற்று நிலைக்க வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளை வேண்டி பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்கின்றோம்.

**கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வரகுருக்கள்,**
**தலைவர் , இந்துக்குருமார் அமைப்பு,**
**சிவஸ்ரீ ச.சாந்தரூபக்குருக்கள்,**
**செயலாளர் , இந்துக்குருமார் அமைப்பு.**



சூரியன் கதிர் பரப்ப
தாமரை இதழ் விரிக்க
அந்தணர்இன்னிசை கானம் இசைக்க
புதுமணப் பெண்ணாய் பவனிவா
இனிய தமிழ் சித்திரைப்புத்தாண்டே

## மாற்றம் தருமா?

**மலரும் புத்தாண்டு மாற்றமதைத் தருமா?**
**புலரும் பொழுதாகத் தோற்றமதைத் தருமா?**
**பலரும் பயனுறவே புத்துணர்வு தருமா?**
**இலரும் உளரெனவே உயர்வுதனைத் தருமா?**
*-நாயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்.*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தொடர்ந்து தாமதம்

## பரீட்சைகள் திணைக்களம் கவலை

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பிக்க முடியாத காரணத்தினால் முழுக் கல்விச் செயற்பாடுகளும் குழப்பநிலையில் உள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் கவலை வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக பரீட்சை திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை நிறைவடைந்து கிட்டத்தட்ட 54 நாட்கள் கடந்துவிட்டதாகவும் ஏற்கனவே மதிப்பீட்டுப் பணிகள் மிகவும் தாமதமாகி வருவதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பணியைத் ஆரம்பிக்க பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பங்களிப்பு கிடைத்தால், ஏற்கனவே விண்ணப்பித்த மதிப்பீட்டு ஆய்வாளர்களைக் கொண்டு மதிப்பீட்டுப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க முடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலை தொடர்ந்து. மேலும் தாமதிக்காமல் இந்த தேசியப் பணியை வெற்றிடையச் செய்வதற்கு பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி)

# தேர்தல் தொடர்பான அச்சுப் பணிகள் நிறுத்தம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான அச்சுப் பணிகளை முற்றாக நிறுத்துவதற்கு அரசாங்க அச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

திறைசேரியில் இருந்து போதிய நிதி கிடைக்காத காரணத்தினால் தேர்தல் தொடர்பான ஏனைய அச்சடிப்பு நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்குச் சீட்டுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் அரசாங்க அச்சகத்தினால் அச்சிடப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளுக்காக ஐந்து கோடி ரூபாவிற்கும் அதிகமான பணம் செலவிடப்பட்டுள்ளதாகவும் திறைசேரியினால் அதற்கான பணம் இதுவரை வழங்கப்படவில்லை.

இதன் காரணமாக 200 இற்கும் மேற்பட்ட அரசாங்க அச்சக ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, இது தொடர்பில் திறைசேரிக்கு மீண்டும் நினைவூட்டல் விடுக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் அரசாங்க அச்சகம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களை பாதுகாக்க இந்துமத விவகார அமைச்சிற்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்

## உலக இந்துக்குழு மோடிக்கு கடிதம்

(டில்லி)

வடக்கு -கிழக்கில் உள்ள இந்து ஆலயங்களை பாதுகாப்பதற்கு புத்தசாசன அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் போன்று இந்து மத விவகார அமைச்சிக்கும் அதிகாரங்கள் வழங்கப்படுவதை இந்தியா உறுதி செய்ய வேண்டும் என உலக இந்துக் குழுவின் உறுப்பினரான கல்பனா சிங் இந்திய மத்திய அமைச்சுக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பியுள்ளார்.

அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டதாவது.

இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது 2000 இற்கும் மேற்பட்ட இந்துக் கோவில்கள் இலங்கை இராணுவத்தால் அழிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் (2009 இற்குப் பின்) இந்து மக்களின் கோவில்கள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் நுழைவதை ஸ்ரீலங்கா இராணுவத்தின் மறைவின் கீழ் இயங்கும் புத்த பிக்குகள் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் தீவிர ஈடுபாட்டினால் சில பழைய இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் இந்தச் செயற்பாடு அதிகமாகக் காணப்படுகின்றது. எனினும் தீவின் வடக்குப் பகுதியில் உள்ள சில கோவில்களும் பௌத்தர்களின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

இந்திய உதவிகளை பெற்று வரும் இலங்கைத் தொல் பொருள் திணைக்களமும் இராணுவமும் இந்து மத வழிபாட்டுத் தலங்களை திட்டமிட்ட முறையில் தொடர்ந்து சேதப்படுத்தி வருகின்றன.

தொல்பொருள் திணைக்களம் மற்றும் சில போர்க் குணமிக்க பௌத்த துறவிகள் சில பழைய இந்துக் கோவில்களை சேதப்படுத்துவது, பெயர் மாற்றுவது மற்றும் புத்த அடையாளமாக மாற்றுவது சகிக்க முடியாத கலாசார குற்றமாகக் கருதப்படுகிறது.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் போது, இலங்கையில் உள்ள இந்துக் கோவில்களை இலங்கை அரசு அழித்துக் கொண்டிருந்தால், இந்த நடவடிக்கை நட்பு நாடுகளுக்கு ஆபத்தான அணுகுமுறையாக இருக்கும்.

இவ்வாறான நிலையில், இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளை ஊக்குவிப்பது சுற்றுலாத்துறையை பாதிக்கும். இந்த விவகாரத்தில் இந்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும்.

இந்து மதப் பாரம்பரியத்தின் உடனடி அழிவைத் தடுக்க, தீவின் வடக்கு-கிழக்கு பிராந்தியத்திற்கான இடைக்கால சர்வ தேச பாதுகாப்பு பொறிமுறையை நிறுவ இலங்கையை இந்திய அரசாங்கம் வலியுறுத்த வேண்டும் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# துருக்கி மக்களுக்கு நன்கொடை வழங்கிய இலங்கை அரசாங்கம்



(கொழும்பு)

அண்மையில் துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் 4.6 தொன் ஆடைகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கான துருக்கி தூதுவர் ரக்கிபே டெமெட் செகெர்சியோக்லுவிடம் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி குறித்த நன்கொடையை கையளித்துள்ளார்.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான உறவுகளை எடுத்துரைத்த அமைச்சர், துருக்கி மக்களுடன் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் ஒற்றுமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் பதில் செயலாளர் யசோஜா குணசேகர, துருக்கிய தூதரகம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உற்பத்தி குறைந்துள்ள போதிலும் வெடிபொருட்களின் விற்பனை அதிகரிப்பு

(கொழும்பு)

பட்டாசு உள்ளிட்ட கேளிக்கை வெடிபொருட்களின் விற்பனை இந்த ஆண்டு அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், கேளிக்கை வெடி பொருட்களின் உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருட்கள் இன்மையால் உற்பத்தி நடவடிக்கைகள் 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளன.

எனினும், இந்த முறை சித்திரைப் புத்தாண்டை இலக்காக கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட கேளிக்கை வெடிபொருட்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாக அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் தினேஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த டிசெம்பர் மாதத்தை விடவும் தற்போது கேளிக்கை வெடிபொருட்களின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குறிப்பிடுகின்றனர். (நி)

# இளநீர் விலை அதிகரிப்பு



(கொழும்பு)

இந்த நாட்களில் மிகவும் வெப்பமான காலநிலையால், உடலை குளிர்விக்க பல்வேறு வகையான பானங்களை மக்கள் பயன்படுத்துகின்றார்கள்.

அந்த வரிசையில் தற்போது இளநீர் விலை தாக்குப் பிடிக்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் 80 ரூபாய் முதல் 90 ரூபாய் வரை விற்கப்பட்ட இளநீர் விலை இன்று 200 ரூபாயை தாண்டியுள்ளது.

மேலும் ஒரு இளநீர் வெளிநாட்டவருக்கு 300 ரூபாய்க்கு விற்கப்படுவதாக தெரிவிக்கின்றனர். (நி)

# எரிபொருள் விற்பனை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 7 நாட்களின் தரவுகளுக்கமைய, தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர கியூ. ஆர் அமைப்பின் மூலம் எரிபொருள் விற்பனை மற்றும் சாதாரண எரிபொருள் விற்பனையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் 60% இற்கும் குறைவாக இருந்த விற்பனை தற்போது 80% இற்கு மேல் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர கியூ. ஆர்விநியோகத் தல்களை கடைப்பிடிக்காத 66 எரிபொருள் நிலையங்களை தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டதையடுத்து, இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, பண்டிகைக் காலங்களில் விநியோகிக்கப்படும் நாளொன்றுக்கான எரிபொருள் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதி ஞாயிறுகளில் உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தை

### யாழ். அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரை சந்தைப் பகுதியில் உள்ள சங்கிலியன் பூங்காவில் யாழ். மாநகர சபையின் அனுசரணையோடு உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை ஒவ்வொரு வார இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை வேளையில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாதசுந்தரம் தெரிவித்தார்.

நேற்று மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூர் பகுதிகளில் இருக்கின்ற உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக இவ்வாறான சந்தை நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது என தெரிவித்தார். (4-6)

## யாழ்.போதனா மருத்துவமனையில் குருதிக்கு பெரும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் அனைத்துக் குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக யாழ்.போதனா மருத்துவமனை தெரிவித்துள்ளது.**

இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாமையால் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

எனவே ஏற்கனவே குருதிக் கொடை வழங்கி நான்கு மாதங்கள் பூர்த்தியான குருதிக்கொடையாளர்களும் புதிய குருதிக் கொடையாளர்களும் யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

இது தொடர்பிலான மேலதிக தகவல்களுக்கு 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு



கொள்ளுமாறு யாழ்.இரத்த வங்கி அறிவித்துள்ளது. (4-6)

## குமுதினி படகின் திருத்த வேலைகளை பார்வையிட்ட சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வல்வெட்டித்துறை பகுதியில் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு வரும் குமுதினி படகினை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் பார்வையிட்டார்.

நெடுந்தீவுக்கான பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்திருந் குமுதினி படகு கடந்த ஆறுமாதங்களாக மாவில் துறையில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் திருத்தப் பணிக்காக வல்வெட்டித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டு நீண்ட காலமாக திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீதி அபிவிருத்தி சபைக்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வட தாரகை படகு என்பன நெடுந்தீவுக்கான பயணிகள் படகாக பயணித்து வந்தநிலையில் குமுதினி படகு பாழுதடைந்ததையடுத்து வட தாரகை படகு மாத்திரமே பயணிகள் சேவையில் ஈடுபட்டு வருகிறது.

இந் நிலையில் திருத்தப் பணிகள் முன்னெடுத்து வரும் குமுதினி படகினை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நெடுந்தீவை சேர்ந்த ஓய்வு நிலை அதிபர் பரதன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (4-6)

## இரணைமடு விவசாயிகளின் நிதிப் பங்களிப்பில் கிளி.பல்கலை மாணவர்களுக்கு உதவித்தொகை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தி நிதியத்தினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகிய மாணவர்களுக்கான ஊக்குவிப்பு தொகை வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத் திறன் அபிவிருத்தி நிலைய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

மாவட்டச் செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் நிதியத்தின் தலைவரும் மாவட்ட அரசாங்கதிபருமான றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு குறித்த ஊக்குவிப்பு தொகையை வழங்கியிருந்தார்.



78 மாணவர்களுக்கு 15000ரூபா வீதம் வழங்கப்பட்டது. குறித்த நிதியை பிரதானமாக கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் தங்களுடைய கமக்காரர் அமைப்புக்கள் மூலம் வழங்கி வருகின்றனர்.

குறித்த நிகழ்வில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர், மாவட்ட செயலக கணக்காளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன தலைவர், செயலாளர், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-6-316)

## சந்திரசேகரப்பிள்ளையாருக்கு இன்று தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு சந்திர சேகரப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா சித்திரை வருடப்பிறப்பு தினமான இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் பெருந் திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில், நேற்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பைரதத் திருவிழா நடைபெற்றது.

இன்று தேர்த் திருவிழாவைத்தொடர்ந்து நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன. (4-6)

## அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய 85 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் 83 ஆவது ஆண்டு விழா - 2023 இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்குக் குறித்த சனசமூக முன்றலில் அதன் நிலையத் தலைவர் ச.யசிகரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ. ஸ்ரீவர்ணன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் கலை நிகழ்வுகளான வில்லிசை நிகழ்வு, பட்டிமன்றம், நாடக அரங்கேற்றம் போன்றனவும் இடம்பெறவுள்ளன. (4-6)

# நாட்டை பாரிய அழிவுப் பாதைக்குள் தள்ள முனைகிறார் ஜனாதிபதி ரணில்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்



(முறிகண்டி)

ஜே ஆர் எவ்வாறு ஜனாதிபதியாக இருந்து நாட்டை அழிவு பாதைக்கு கொண்டு சென்றாரோ, அவரது மருமகன் அதைவிட இந்த நாட்டை மிக பயங்கரமான நிலைக்குள் தள்ள முனைகிறார் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இன்று இருக்கின்ற நாட்டின் அரசியல் தலைவர் தன்னுடைய சர்வதிகாரத்தை நிலைநாட்டுவதற்கும், தன்னை சர்வதிகாரியாக காட்டி மற்றவர்களை அடிமைத்தனத்தில் வைத்திருப்பதற்கும் மிகப் பெரிய கைங்கரியத்திற்காக மிகப்பெரிய பயங்கரவாத சட்டத்தை கொண்டுவர முயற்சிக்கிறார்.

அந்த அடிப்படையில் அவர் இனிவரும் காலங்களில் தேர்தலை 2 ஆண்டுகளிற்கு நடத்தக்கூடிய செயற்பாடுகளை முடக்கி வைத்திருக்கின்றார். குறிப்பாக தேர்தல் திணைக்களம், தேர்தல் ஆணையகம் நேற்று முன்தினம் அறிவித்த தன் பிரகாரம் எந்தவொரு திகதியும் குறிப்பிடாமல் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்திருக்கின்றதென்றால், தேர்தல் திகதிகள் எப்பொழுது அறிவிக்கப்படும் என்ற கேள்வி இருக்கின்றது.

பலபேர் இடமாற்றங்களிற்காக இருக்கின்றார்கள். பல அரச உத்தியோகத்தர்கள் இடம் மாறிச்செல்லவேண்டிய தேவை இருக்கின்றது. 3000 க்கு மேற்பட்ட அரச உத்தி யோகத்தர்கள் தங்களுடைய வேலைகளிற்கு சென்று சம்பளத்தை பெற்றுக் கொள்ள முடியாதவாறு இருக்கின்றார்கள். 4 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்களை சிங்கள தலைவர்கள் எவ்வாறு இன அழிப்பு செய்தார்களோ அதைவிட பயங்கரமானதும் உக்கிரமானதுமான நடவடிக்கையை முன்னெடுக்க ரணில் விக்கிரமசிங்க முனைந்துள்ளார்.

அது இந்த நாட்டின் அழிவுக்கு மிகப்பெரிய கால்கோளாக அமையப்போகின்றது என்பது தான் இந்த தேர்தல்கள் பின் போடப்படுவதற்கான மிகப் பெரிய காரணம். இங்கு ஜனநாயகம் செத்துக்கொண்டிருக்கின்றது எனத் தெரிவித்தார் (4-6-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'சோப கிருது' வருஷ வருஷப்பிறப்புக் கருமங்கள்

## சோப கிருது வருஷ ஜாதகம்

### வாக்கிய பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| குரு | சூரி புதன் ராகு | சுக் | செவ் |
| சனி | புது வருஷ கிரக நிலை | | லக்கினம் |
| சந் | | | |
| | | கேது | |

**வாக்கிய பஞ்சாங்கம்**

சோப கிருது வருஷம் சித்திரை மாதம் 01 ஆம் திகதி (14.04.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02 மணி 03 நிமிடத்தில் அபரபக்க நவமித் திதியில் திருவோண நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில், சாத்தியம் நாமயோகத்தில், கரசக் கரணத்தில் கடக லக்கினத்தில், மீன நவாம்சத்தில், சுக்கிரன் கால வோரையில், செவ்வாய் சூக்கும வோரையில், சாத்வீக குணவேளையில் நட்சத்திர பட்சியாகிய மயில் சாலுத் தொழிலும், சூக்கும் பட்சி அரசுத் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய "சோப கிருது" வருஷம் பிறக்கின்றது. அன்று முற்பகல் 10.03 மணி முதல் அன்று பிற்பகல் 6.03 மணிவரை விஷு புண்ணிய கால மாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையும் காலில் புன்கிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் வெள்ளைக் கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து முத்து, வைரம் இணைந்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி நறுமலர் சூடி தத்தம் வீடுகளில் சூரியனுக்குப் பொங்கல் பூஜைகள் செய்து, விக்கினேஸ்வரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து இயன்ற தான தர்மங் களையாற்றி குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசிபெற்று உற்றார், நண்பர்களுடன் அளவளாவி அறுசுவை உணவுடன் கடுகு, எள், புளி, நெல்லிக்கனி சேர்த்த ருந்தி தாம்பூலம் தரித்து கண்ணாடி, தீபம், நிறைகுடம், தேவதைகளின் திருவுருவம், திருமுறைப் புத்தகம், தாமரை முதலிய பூக்கள், பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு முதலிய மங்கலப் பொருட்களைத் தரித்து புதிய வருஷப் பலன் களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து தூய தவத்தாற் பெற்ற மானிடப் பிறவியில் இனிது சிந்தித்து மங்களகரமாக வாழக்கடவர்.

**திருக்கணித பஞ்சாங்கம்**

சோபகிருது வருஷம் சித்திரை மாதம் 01 ஆம் நாள் (14.04.2023) வெள்ளிக் கிழமை பகல் 2.59 மணிக்கு "சோப கிருது" எனும் பெயருடைய தமிழ்ப் புது வருடம் உதயமாகின்றது. இது 60 வருஷ சுற்று வட்டத்தில் 37 ஆவது வருஷமாகும். அந்நேரம் நட்சத்திரம் திருவோணம் 2 ஆம் பாதம். திதி -அபரபட்ச நவமி, அசுபயோகம் அன்று பகல் 10.59 மணி முதல் பிற்பகல் 6.59 மணிவரை மேட சங்கிரமான புண்ணிய காலமாகும். வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் சிங்கம் ஆகும்.

அனைவரும் சித்திரை 01 ஆம் திகதி அதிகாலையில் துயிலெழுந்து மேற்படி புண்ணிய காலத்தில் சங்கற்ப பூர்வமாக மருத்து நீர் தேய்த்து தலையில் புங்கமிலையும் காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து, வெண்ணிற பட்டாடையாயினும் அல்லது மஞ்சள் கரையமைந்த வெள்ளைப் புது வஸ்திரமா யினும் தரித்து வைரம் பதிக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்து விநாயகர் முதலிய இஷ்ட குல தெய்வங்களைத் தரிசனம் செய்து இயன்ற தானங்கள் வழங்கி புது வருஷ சூரியனுக்கு பொங்கல், பூசை வழிபாடுகள் மேற்கொண்டு குரு, பெற்றோர் முதலியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று இயன்ற தானாதிகள் வழங்கி பிதிர் விதானு சாரிகள் சிரார்த்தம், தர்ப்பணம் என்பன செய்து நண்பர்கள், விருந்தினர்களை வரவேற்று சுற்றமித்திரர்களிடருந்து கடுகு தாளிதம் செய்த புளியோதரை, தயிரன்னம், நெல்லிக்காய்த் துவையல் முதலிய வற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போசனம் செய்து தாம்பூலம் அருந்தி சுகந்த சந்தன புஸ்பாதிகளை அணிந்து புதுப் பஞ்சாங்க பலன்களைக் கேட்டு புதுவருஷத்தில் ஆற்றக் கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்கலகரமாக வாழ்வார்களாக.

## சோபகிருது வருஷ ஜாதகம்

### திருக்கணித பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| குரு- 28-10 நெப்- 02-01 | சூரி-00-00 ராகு -10-33 புதன்-18-58 யுரே-23-19 | சுக் 09-32 | செவ் 15-53 |
| சனி-09-51 | புது வருஷ கிரக நிலை | | |
| சந்-13-25 | | | 10-12 லக்கினம் |
| | | 10-33 கேது | |

**மருத்து நீர் தயாரித்தல்**

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம் பூ, துளசி, விஸ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிக் கொள்க.

**சோபகிருது தன்னிற் றொல்லுலகெல்லாஞ் செழிக்குங்**
**கோபமகன்று குணம் பெருகுஞ்-சோபனங்கள்**
**உண்டாகு மாரி பொழியாமற் பெய்யுமெல்லா**
**முண்டாகு மென்றே யுரை**

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்**

ரோகினி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் கால்கள், அத்தம், உத்தரடாம் 2ஆம், 3ஆம், 4ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1 ஆம் 2ஆம் கால்கள் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தானதர்மங் களைச் செய்து சங்கிரம தோசத்தை நிவர்த்தி செய்யக் கடவர்.

### கைவிஷேடம்- வாக்கிய பஞ்சாங்கம்

15.04.2023 சனி முற்பகல் 7.52 மணிமுதல் 9.00 மணிவரை
16.04.2023 ஞாயிறு முற்பகல் 7.49 மணிமுதல் 9.48 மணிவரை

### கைவிஷேடம்- திருக்கணித பஞ்சாங்கம்

15.04.2023 சனி காலை 6.45 மணிமுதல் 7.30 மணிவரை
15.04.2023 சனி முற்பகல் 8.00 மணிமுதல் 8.55 மணிவரை
16.04.2023 ஞாயிறு முற்பகல் 8.00 மணிமுதல் 9.30 மணிவரை
16.04.2023 ஞாயிறு பிற்பகல் 12.10 மணிமுதல் 01.15 மணிவரை

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2807

**சயானா**

உங்களை யாராவது
நிராகரித்தால்
கவலைப்படாதீர்கள்.
பெரும்பாலும் மக்கள்
விலையுயர்ந்தவற்றைத்தான்
வாங்க
இயலாமல்
நிராகரிக்கிறார்கள்

**சர்மிலா**




கவலைகள்
வந்து
கொண்டுதான்
இருக்கும்
அதற்காக
அதை
சிம்மாசனம்
போட்டு
உட்கார
வைக்கக் கூடாது

**மகிழினி**

26 எழுத்துக்கள்
தெரிந்தவன் துணிந்து
பேசுகின்றான்.
247 எழுத்துக்கள்
தெரிந்தவன்
பணிந்து போகின்றான்.

**ஆருத்ரன்**




என்னிடம்
சிறப்பான
தனித்திறமை
என்று
எதுவுமே
இல்லை.
என்னிடம்
இருப்பது
ஆர்வம்
மட்டுமே
-ஐன்ஸ்டீன்

**நிஷா**

முடியும் எனச்
சொல்வது பெரிதல்ல.
எதையும் முயன்று
முடித்துக் காட்ட
வேண்டும்.

**ராகுல்**



உங்கள்
கனவு
வெற்றி
அடையாது
முட்டாள்த்
தனமானது
என்று யார்
சொன்னாலும்
ஏற்றுக்
கொள்ளாதீர்கள்
-ஜாக் மா

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 126

# ஆசிரியர் கொடுத்த காகிதம்

வகுப்பாசிரியர் தனது வகுப்பு மாணவர்களைப் பார்த்து ஒவ்வொரு வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களினதும் பெயரையும் எழுதச் சொன்னார்.

“ஒவ்வொரு பெயருக்கும் எதிரே; அவர்களிடம் உங்களுக்கு பிடித்த நல்ல விஷயம் ஒன்றைப்பற்றி எழுதுங்கள்.” மாணவர்கள் ஒவ்வொருவரும், தங்களுக்கு தோன்றிய கருத்துக்களை எல்லாம் எழுதிக் கொடுத்தனர்.

வகுப்பாசிரியர் ஒவ்வொரு மாணவனின் பெயரிலும், ஒரு தாள் தயார் செய்து, அதில் மற்ற மாணவர்கள் அவனைப் பற்றி எழுதியிருந்த உயர்வானவார்த்தைகளை வரிசையாகத் தொகுத்து எழுதி கீழே தன் கையெழுத்தையும் போட்டு, ஒவ்வொரு மாணவராக அழைத்து கையில் கொடுத்தார்.

“நான் இவ்வளவு சிறப்பானவனா..? என்னைப் பற்றி மற்றவர்கள் இவ்வளவு நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறார்களா?” என அத்தனை மாணவர்களும் ஆனந்தத்தில் இருந்தனர்.!

தன்னைப்பற்றி உயர்வாகச் சொன்னதற்காக, ஒவ்வொரு மாணவனுக்கும்.சக. மாணவர்கள் மேல் அன்பு அதிகரிக்கிறது. அந்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள குணாதிசயங்களை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். பல வருடங்கள் கழிகின்றன.

அந்த வகுப்பில் படித்தமாணவன் ஒருவன் வளர்ந்த பிறகு இராணுவத்தில் சேர்ந்தான். சில வருடங்கள் கழித்து போர் ஒன்றில் வீரசாகசம் புரிந்து, மரணம் அடைகிறான்.

அவன் உடல் இராணுவ மரியாதையுடன் சொந்த ஊர் கொண்டு வரப்படுகிறது. இறுதிச் சடங்கில், கலந்து கொள்ள அந்த வகுப்பாசிரியரும் செல்கிறார். மிடுக்கான இராணுவ உடையில் - நாட்டின் தேசியக்கொடி போர்த்தப்பட்டு, சவப்பெட்டியிலும் கம்பீரத்துடன் காணப்பட்ட அந்த மாணவனைக் கண்டு பெருமிதத்துடன் கண் கலங்குகிறார்.

அங்கிருந்த சரவணனின் தாயும் தந்தையும் “நீங்கள் சரவணனின் 10 ஆம் வகுப்பு ஆசிரியரா?” எனக் கேட்க, ஆம் என்று ஆசிரியர் தலைய சைத்தார்.

அந்த சோகத்திலும் சரவணனின் பெற்றோர்கள் நான் உங்களுக்கு ஒன்றைக் காட்ட வேண்டும்.

இது சரவணன் போரில் வீர மரணமடைந்தபோது, அவனது பாக்கெட்டிலிருந்து இறுதியாக கண்டெடுக்கப்பட்டது”. என பல முறை மடிக்கப்பட்டு, மடிப்புகள் எல்லாம் டேப் போட்டு ஒட்டப்பட்டு பத்திரமாக பாதுகாக்கப்பட்ட ஒரு காகிதம்.

அது பல வருடங்களுக்கு முன்னர் அந்த வகுப்பாசிரியர் சரவணனைப் பற்றிய நல்ல குணங்களை வரிசைப்படுத்தி தொகுத்து எழுதிக் கொடுத்திருந்த அதே காகிதம் தான்!

கண்ணீரப் பெருக்குடன் சரவணனின் தாய் கூறுகிறார் - “ரொம்ப நன்றி இந்த கடிதத்தை அவன் உயிரையும் விட மேலாக மதித்தான்.

இத்தனை வருடங்களும் அதை அவ்வளவு பத்திரமாக பாதுகாத்து வந்தான். அவனுக்கு வாழ்க்கையில் மிகுந்த தன்னம்பிக்கையும், பிடிப்பும் ஏற்பட இந்த காகிதம் தான் உதவியது. இந்த வாழ்க்கைப் பாதை க்ரடு முரடானது.

எங்கே துவங்கும் எப்படி இருக்கும் -எப்போது, எப்படி முடியும்? யாருக்கும் தெரியாது.இருக்கின்ற காலத்தில் நம்முடன் இருப்பவர் களை அவர்களின் நல்ல இயல்புகளுக்காக நேசிப்போம்.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் “முகநூல் தரிசனம்” பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு **Valampurii Seithy** எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது **076 636 3378** எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# பட்டாசு வெடிக்கும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

## மருத்துவர்கள் அறிவுறுத்து

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிக்கும் போது ஏற்படும் விபத்துகள் குறித்து அவதானமாக செயற்படுமாறு மருத்துவர்கள் பொது மக்களிடம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

புத்தாண்டு காலப்பகுதியில் பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் விபத்துகள் அதிகரிக்கலாம் என அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சிறுவர்களை பட்டாசு வெடித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கும் போது பெற்றோர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் மருத்துவர்கள் தெரிவித்தனர். (நி)



(15246)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் நடாத்திய இப்தார் நிகழ்வின் போது யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் கௌரவ சாம்பசிவம் சுதர்சன் அவர்களுக்கு கலாபூஷணம் பரீட் இக்பால் தமிழ் மொழி பெயர்ப்புடன் புனித குர்ஆன் பிரதி ஒன்றை வழங்கிய போது எடுத்த படம்.
அருகில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முன்னாள் உலமா சபைத் தலைவர் அஷ்ஷேக் A.M.அப்துல் அஸீஸ் மௌலவி (காஸிமியா) அவர்களையும் படத்தில் காணலாம்.

# மரண அறிவித்தல்

## திருமதி. ஜெயலக்சுமி கோபாலசிங்கம் (தவம்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11.02.1945 | 13.04.2023 |

இலக்கம் 03, ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை, கச்சேரியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவம் என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி. ஜெயலக்சுமி கோபாலசிங்கம் 13.04.2023 (நேற்று) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலம் சென்ற செல்லத்துரை சிவக்கொழுந்து தம்பதியரின் புதல்வியும், கோபாலசிங்கத்தின் (இரத்தினம்) பாசமிகு மனைவியும், சிவனேசன் (ஓய்வு பெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர்), சிவபாலன் (பிரான்ஸ்), இந்திரவதனா, காலம் சென்ற பாலமுரளி, ஜனார்த்தனி, ஜனார்த்தனன் (இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர் சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலம் சென்ற சிவகுருநாதர், சிவபாக்கியம், யோகராஜா, சின்னராசா, கோபாலகிருஷ்ணன் மற்றும் கலாமதி, சண்முகராசா, சிவசோதி, அருளானந்தம் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), நகுலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு, சகோதரியும், காலம் சென்றவர்களான பராசக்தி, சுப்பையா, பத்மராணி, பிறேமா, ருக்குமணி, மருதவாணர் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், புனிதகுமாரி, விக்கினேஸ்வரி (பிரான்ஸ்), சர்மிலா (யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌதமி, கௌதமன், ஹரிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.04.2023) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலக்கம் 03,
ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.
077 917 9323

(15252)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 152





நந்தினியின் முகத்தில் வெற்றிப் பெருமிதத்தின் சாயல் பரிணமித்தது. அவளுடைய வேல்விழிகள் வந்தியத்தேவனுடைய நெஞ்சை ஊடுருவின போல் நோக்கின.

"சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்கு நீர் ஏன் அவ்வளவு ஆவல் கொண்டிருந்தீர்?" என்று கேட்டாள்.

"உலகப் பிரசித்தி பெற்ற அந்தச் சுந்தர புருஷரைப் பார்க்க நான் விரும்பியதில் வியப்பு என்ன? உலகத்தில் வீர மன்னர்கள் தங்கள் வீரமும் பௌருஷமும் பெருக வேண்டும் என்றும், இராஜ்யமும் கீர்த்தியும் விஸ்தரிக்க வேண்டும் என்றும் விரும்புவார்கள். அவ்விதமே பிரஜைகளைப் பிரார்த்தனை செய்யும்படியும் சொல்வார்கள். ஆனால் நம்முடைய சக்கரவர்த்தியைப் பற்றிப் புத்த பிக்ஷுக்களின் மடங்களில் என்ன பிரார்த்தனை செய்கிறார்கள்?

"சுந்தரச் சோழர் வண்மையும் 'வனப்பும் திண்மையும் உலகிற் சிறந்து வாழ்கெனவே"என்று பிரார்த்தனை செலுத்துகிறார்கள். இத்தகைய கலியுக மன்மதனைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு வெகு நாளாக ஆசையாயிருந்தது"

"ஆமாம் சக்கரவர்த்திக்குத் தம்முடைய அழகைப் பற்றி ரொம்பப் பெருமைதான். அவருடைய செல்வக் குமாரிக்கு அதைவிட அதிக கர்வம்"

"குமாரியா? யாரைச் சொல்லுகிறீர்கள்?"

"பழையாறையிலே இருக்கிறாளே, ஒரு அகம்பாவம் பிடித்த கர்வி, அந்த இளையபிராட்டி குந்தவை தேவியைத் தான் சொல்லுகிறேன்."

வந்தியத்தேவா! நீ அதிர்ஷ்டக்காரன். நீ தேடிக் கொண்டிருந்த உபாயம் இதோ உன் முன்னால் தானே வந்து நிற்கிறது! அதை நன்கு உபயோகப்படுத்திக் கொள்! இவ்வாறு வல்லவரையன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

இத்தனை நேரமும் ஒய்யாரமாகப் படுக்கையில் சாய்ந்து படுத்திருந்த நந்தினி திடீரென்று எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"ஐயா! நான் ஒன்று சொல்கிறேன். அதை ஒப்புக் கொள்வீரா?" என்று கேட்டாள்.

"சொல்லுங்கள், அம்மணி!"

"நீரும் நானும் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளலாம். நீர் எனக்கு உதவி செய்ய வேண்டியது. நான் உமக்கு உதவி செய்ய வேண்டியது. என்ன சொல்கிறீர்!"

"அம்மணி! தாங்கள் சோழ மகாராஜ்யத்தில் சர்வ சக்தி வாய்ந்த தனாதிகாரியின் ராணி. நினைத்ததை நினைத்தபடி சாதிக்கக் கூடிய சக்தி வாய்ந்தவர். நானோ ஒருவிதச் செல்வாக்கும் இல்லாதவன். தங்களுக்கு நான் என்ன விதத்தில் உதவி செய்ய முடியும்?" என்றான்.

அவன் உள்ளத்திலிருந்து பேசுகிறானா, உதட்டிலிருந்து பேசுகிறானா என்று தெரிந்து கொள்ள விரும்பிய நந்தினி தன் கூரிய விழிகளை அவன் மீது செலுத்தினாள். வந்தியத்தேவன் அதற்குச் சிறிதும் கலங்காமல் நின்றான்.

"அவருக்கு 'நந்தினி' என்று ஒரு சகோதரி இருந்தாள்' என்பதை அடியோடு மறந்து விடும்படி சொல்லும்!"

"சொல்லி விடலாம் ஆனால் நடக்கிற காரியமில்லை."

"எது?" "தங்களை மறப்பது தான். இரண்டு தடவை தற் செயலாகப் பார்த்த என்னாலேயே தங்களை மறக்க முடியாது போலிருக்கிறதே! வாழ்நாளெல்லாம் தங்களோடு இருந்தவரால் எப்படி மறக்க முடியும்?"

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## யானை பல் விளக்குமா?



புத்தக மூட்டையுடன் பள்ளிக்குக் கிளம்பிய அப்பு அம்மாவுக்கு டாட்டா சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

"ஏண்டா இன்னைக்கு குளிச்சியா" என்றாள் அப்புவின் அம்மா.

"நேரமாச்சும்மா, நாளைக்கு குளிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஓடினான். அப்பு ஐந்தாவது படித்துக் கொண்டிருந்தான்.

வகுப்பில் அவன் தான் முதல் மாணவன். அப்புவின் அம்மாவிற்குப் பெருமையாக இருந்தது.

அடுத்த நாள் வகுப்பிற்குள் நுழைந்ததும் ஆசிரியர் அப்புவிடம் தான் வந்தார்.

"ஏன் அழுக்கு சட்டையை போட்டுக் கொண்டு வந்திருக்கிறாய். துவைத்துப் போடக்கூடாதா?" என்று ரகசியமாக அவனிடம் கேட்டார்.

"மறந்திட்டேன் சார்" சமாதானம் சொன்னான் அப்பு. படிப்பில் கெட்டிக்காரனாக விளங்கிய அப்பு ஏனோ தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. பல நாட்கள் அப்பு பல் [illegible] பள்ளிக்குப் [illegible]க்கிறான். அப்போது பையன்கள் இவனிடம் கேட்டால், "யானை பல் விளக்குகிறதா" என்று கிண்டலாகப் பதில் சொல்வான்.

அப்புவின் அம்மாவும் வகுப்பு ஆசிரியரும் பலமுறை கூறியும் அவன் தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தவே இல்லை.

அவன் கவனம் முழுவதும் படிப்பிலேயே இருந்தது. ஆனால் பையன்கள் இவனை "அழுக்கு மாமா" என்று அழைத்தனர்.

அரையாண்டுத் தேர்வு வந்தது. அப்பு விழுந்து விழுந்து படித்தான். முதல் மார்க்கை வேறு யாரும் தட்டி போய்விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

"டேய் குளிச்சிட்டுப் போய் படிடா" இது அப்புவின் அம்மா.

"குளிக்கிற நேரத்துல ஒரு பாடம் படிக்கலாம்மா" என்பான் அப்பு.

பரீட்சைக்கு இன்னும் இரண்டு நாள் இருந்தது. அப்போது அப்புவுக்கு திடீரென்று பல்வலி வந்தது. வலியோடு பள்ளிக்கூடம் சென்றான்.

மாலை வீட்டிற்கு வருவதற்குள் அவன் முகத்தில் தாடைப்பகுதி பெரியதாக வீங்கிவிட்டது. விண் விண் என்று வலித்தது. உடம்பு அனலாக கொதித்தது.

அப்புவின் அம்மாவும் அப்பாவும் கை வைத்தியமாக ஏதோ செய்தார்கள். எதுவும் சரிப்பட வில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதோர் வீணை செய்தே–அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? இனியொரு விதி செய்வோம்–அதை எந்நாளும் காப்போம்.
– பாரதி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சோபகிருது புத்தாண்டில் குறைவிலாது உயிர்கள் வாழ்க!

இன்று தமிழ் – சிங்கள புத்தாண்டு.

காலச் சக்கரத்தின் கணிப்பில் சோபகிருது எனும் புத்தாண்டு இன்று பிறக்கின்றது.

பிறக்கின்ற புத்தாண்டு எல்லோருக்கும் இன்பமாய் அமைய இறைபரம்பொருளின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

தவிர, இப்புத்தாண்டு சிங்கள மக்களுக்கு மானதெனும்போது தமிழ் – சிங்கள மக்கள் மத்தியில் ஒற்றுமை மிகவும் பலப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அது இதுவரை நடந்தாகவில்லை.

இனியேனும் அந்த ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதே நம் பிரார்த்தனை.

இதைக்கூறும்போது நம் தமிழ் இனத்தின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்காதா என்ற ஏக்கம் எழவே செய்யும்.

ஆம், எத்தனையோ ஆண்டுகளாக எம் தமிழினம் ஏக்கத்தோடு வாழ்கின்றது.

எனினும் இதனைப் புரிந்து கொள்வதற்கு இன்னமும் தக்க ஆட்சித் தலைமை வந்து சேரவில்லை.

மாறாக தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு அவர்களும் சுதந்திரமாக அனைத்து உரிமைகளுடனும் வாழ வேண்டுமென்ற எண்ணம் நம் சிங்கள மக்களிடமும் ஏற்படவில்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதேநேரம் தமிழ் மக்களுக்கு தகைசார்ந்த அரசியல் தல்லைமை வாய்க்கப் பெறவில்லை என்பதையும் இங்கு குறித்துரைப்பது அவசியம்.

உண்மை. நம் தமிழ் அரசியலில் நேர்மையான அரசியல்வாதிகளுக்குப் பெரும் ப்ஞ்சம் ஏற்பட்டுள்ளது.

எத்தனையோ தமிழ் இளைஞர்கள் தமிழ்ப் பற்றோடும் தமிழ் இனம் வாழ வேண்டும் என்ற வேணவாவோடும் இருக்கின்றனர்.

அதன் பொருட்டு அவர்கள் ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகள் சார்ந்து ஆதரவளித்தனராயினும் ஈற்றில் தாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதையே அந்த இளைஞர்கள் தமக்கான அனுபவமாகப் பெற்றுள்ளனர்,

இதுதவிர, அரசியல் நாட்டம் கொண்டுள்ள தமிழ் இளைஞர்கள் தமது அரசியல் பிரவேசத்தை நேர்மையீனம் என்ற நுழைவாயிலுக்குள்ளால் ஆரம்பிக்கின்றனர்.

இதற்காக அவர்கள் இன்னும் ஒருபடி மேற்சென்று, நேர்மையற்ற தமிழ் அரசியல்வாதிகளுக்குப் பலம் சேர்க்கின்றனர்.

என்ன செய்வது பொதுவில் இளம் அரசியல்வாதிகளிடம் நேர்மையை – துணிச்சலான முடிவை – உற்சாகமான செயற்பாட்டை மக்கள் எதிர்பார்ப்பர்.

ஆனால் எங்கள் தமிழ் மக்களின் நிலைமை அதுவல்ல.

இங்கு புதுமுக இளம் அரசியல் தரப்புகள் உண்மைகளை மறைத்து, போலித்தனங்களை அங்கீகரித்து, நேர்மையற்றவர்களை ஆதரித்து அரசியலை சாக்கடையில் இருந்து மீட்காமல் அதற்குள் அமிழ்த்துகின்றனர்.

இந்தச் சுயநலம் இருக்கும்வரை தமிழ் இனம் தலைநிமிர்வது சாத்தியமாகுமா என்பதை நம் தமிழ் மக்கள் சிந்திக்கும் அதேவேளை, பிறக்கின்ற புத்தாண்டில் எல்லா உயிர்களும் குறைவிலாது வாழ வேண்டும் என்பதே நம் பிரார்த்தனை.

# எதேச்சதிகார வழியில் பயணித்தால் அரசை ஓட ஓட விரட்டுவோம்

## விமல் வீரவன்ச

(கொழும்பு)

ஊடகங்களை அடக்கி ஒடுக்க இந்த அரசு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தால் அரசிலுள்ள அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,ஒரு புறம் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், மறுபுறம் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டம் என இரண்டு கொடூரச் சட்டங்களை ஒரே தடவையில் கொண்டுவர அரசு முயற்சிக்கின்றது.

மக்களின் ஜனநாயக உரிமையை, கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் எந்தவொரு சட்டத்துக்கும் நாம் ஆதரவு வழங்க மாட்டோம்.

இந்த அரசு திருந்த வேண்டும் அல்லது பதவி விலக வேண்டும். அதை விடுத்து எதேச்சதிகார வழியில் இந்த அரசு பயணித்தால் மக்களுடன் சேர்ந்து அரசை ஓட ஓட விரட்டியடிப்போம். நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவோம் எனத் தெரிவித்தார். (4-7-9)

# பொருளாதார மீட்சிக்கு தொடர்ந்து ஆதரவு

## ஆசிய அபிவிருத்தி வங்கி

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும் என தெரிவித்துள்ளது.

நேற்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள செவ்வியின் போதே ஆசிய அபிவிருத்தி வங்கி இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இதனை ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் உள்நாட்டு இயக்குநர் சென் சென் உறுதிப்படுத்தியுள்ளார். எதிர்காலத்தில் சலுகை நிதியை வழங்குவதன் ஊடாக இலங்கைக்கு ஆதரவை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7-9)

# கணக்கறிக்கையை சமர்ப்பிக்காத கட்சிகளை இனங்காண்க

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

கணக்கறிக்கைகளை உரிய முறையில் சமர்ப்பிக்காத அரசியுல் கட்சிகள் தொடர்பில் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு விடயங்களுக்கு பொறுப்பான பிரிவுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கூடியபோது, இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சில அரசியல் கட்சிகள் 2021ஆம் ஆண்டிற்கான தமது கணக்கறிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதை தொடர்ச்சியாக தாமதமப்படுத்தி வந்த நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

14 நாட்களுக்குள் 2021ஆம் ஆண்டிற்கான தமது கணக்கறிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு, அரசியல் கட்சிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது.

இந்த காலக்கெடு, கடந்த வாரம் நிறைவடைந்ததாக தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (4-7-9)

# ஊடகவியலாளர் மாணிக்கவாசகத்தின் இறுதிக் கிரியைகள் நேற்று

மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகத்தின் இறுதிக் கிரியைகள் நேற்று வவுனியாவில் இடம் பெற்றுள்ளது.

ரொய்ட்டர், பிபிசி, வீரகேசரி மற்றும் மின்னிதழ்களில் செய்தியாளராகவும், பத்தி எழுத்தாளராகவும் செயற்பட்டு வந்த பொன்னையா மாணிக்கவாசகம், தனது 76 ஆவது வயதில் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார்.

அன்னார் நாட்டின் நெருக்கடியான காலகட்டங்களில் குறிப்பாகத் தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்த மோதல்கள் குறித்து தமது உயிரையும் பொருட்படுத்தாமல் செய்தி சேகரித்து சர்வதேசமெங்கும் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களை வெளிப்படுத்தி வந்தார்.கடந்த 40 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் பணியாற்றிய அவர், இறக்கும் வரை ஊடகத்துறையில் செயற்பட்டு வந்தவராவார்.

அவரது இறுதிக் கிரியைகள் வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்றது. (4-7-9)

# வெப்பமான காலநிலை

## கால்நடைகளை பராமரியுங்கள்

## மில்கோ வேண்டுகோள்

இலங்கையில் வெப்பமான காலநிலை நிலவி வருகிறது.

இதன் காரணமாக கால்நடைகளைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உள்ளூர் பால் உற்பத்தி நிறுவனமான மில்கோ, கால்நடை பண்ணையாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இன்று மேல், தெற்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் குருநாகல், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் அதிக வெப்பம் நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறுவதாக மில்கோ அறிவித்துள்ளது.

இதன் மூலம், கால்நடை வளர்ப்பாளர்களை தங்கள் கால்நடைகளை காப்பகங்களுக்குள் வைப்பதன் மூலம் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும், இந்தக் காலகட்டத்தில் குடிப்பதற்கு போதுமான தண்ணீரை வழங்குமாறும் மில்கோ வேண்டுகோள் விடுத்துள்ளது. (4-7-9)

# கடன் முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கான புதிய தளத்தில் சீனா இணைய வேண்டும்

## ஜப்பான் நிதியமைச்சர்

(ஜப்பான்)

இலங்கையின் கடன் விவகாரங்கள் குறித்து ஒருங்கிணைப்பதற்கான புதிய தளமொன்றை ஜப்பான் பிரான்ஸ் இந்தியா ஆகிய நாடுகள் அறிவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ள ஜப்பானின் நிதியமைச்சர் சுனிச்சி சுசிக்கி சீனாவும் அதில் இணைந்துகொண்டால் அது சிறந்த விடயமாக காணப்படும் என தெரிவித்துள்ளார்.

ஜி7 நாடுகளின் தலைமை பதவியை ஏற்றுள்ள ஜப்பான் இலங்கை போன்ற நடுத்தர வருமான நாடுகளின் கடன் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு முன்னுரிமை அளித்துள்ளது.

ஜி7 நாடுகளின் தலைவர்களின் சந்திப்பின் பின்னர் இந்தியா ஜப்பான் பிரான்ஸ் ஆகிய நாடுகள் புதிய தளம் குறித்து அறிவிக்கவுள்ளன. இந்த விடயம் குறித்து கடன்வழங்கிய நாடுகளின் பல கூட்டங்கள் தொடர்பில் அறிவிக்கப்படலாம்.

நாங்கள் பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டோம். பல நாடுகள் கலந்துகொள்ளும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் சீனாவும் இணைந்துகொண்டால் அது சிறந்த விடயம் என தெரிவித்துள்ளார். (4-7-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(சி-6338)

அன்பர்கள், நண்பர்கள்,வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் புது வருட நல்வாழ்த்துக்கள்.

உங்கள் வீடுகளில் நடைபெறும் மங்கள நிகழ்வுகளுக்கு
தரமான சுவையான உணவுகளைப் பெற்றுக் கொள்ள
இன்றே எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

அனைத்து வகையான புரியாணி வகைகளும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஒருமுறை எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
இணை பிரியாத அறுசுவையில் இணைந்திருங்கள்

இல.102, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம் ( பெற்றோல் செற் அருகாமை) 077 916 5691



# NORTH LANKA IIT CITY CAMPUS

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## APPROVED BY UGC AND UNESCO

U.G.C. அங்கீகாரம்
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அங்கீகாரம்
கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அங்கீகாரம்

இலங்கை கல்வி அமைச்சின் அங்கீகாரம்
IAU வின் அங்கீகாரம்
UNESCO அங்கீகாரம் WHED யின் அங்கீகாரம்

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**Bachelor of Education - TOPUP 1 YEAR**
தகைமை : Diploma in Training College / College of Education
காலம் : 1 Year

**Bachelor of Education 3 YEARS**
தகைமை: A/L 3 Passes
காலம்: 3 Years

**Master of Education**
தகைமை: Bachelor of Education
காலம் : 1 Year

**Bachelor of Commerce with Computer Application**
தகைமை: A/L 3 Passes
காலம் : 3 Years

**Master of Commerce with Computer Application**
தகைமை: Bachelor of Commerce
காலம் :1 Year

**Bachelor of Business Administration**
தகைமை:A/L 3 Passes
காலம் :3 Years

**Master of Business Administration**
தகைமை: Any Degree
காலம் : 1 Year

**Post Graduate Diploma in Public Administration**
தகைமை: Any Degree
காலம்:1 Year

Matale Lanka City Campus
Mr. C. Jeevaratnam
main street, Matale,
T.P: 071 347 6838
070 3199333

North Lanka IIT Top Floor,
People's Bank Building,
Stanley Road, Jaffna
T.P: 0767504535

Lanka City Campus
Vavuniya
Station Road,
Vavuniya
T.P: 0764886169

Lanka City Campus
Mannar, Kilinochchi,
Batticaloa and Trincomalee
Dr.Rev.Fr.S.Jeyarajan Coonghe
T.P: 0702291281

(சி-6355)



## நாகபூஷணி திருமண சேவை

இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

பல்லாயிரக்கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்த மான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம் (சி-6357)
021 222 9306,077 138 7596,
071 999 9306


**புதுமைகள் தொடரட்டும்
மாற்றங்கள் மலரட்டும்**

## தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்


# A1 RAJAH CREAM HOUSE




(சி-6353)

CONTACT - 0779234176 | 0212216085
37, SIR PON RAMANATHAN ROAD, JAFFNA



# இனுவை

## உயர்தர சைவ உணவகம்



வாடிக்கையாளர்களுக்கு
இனிய புதுவருட
வாழ்த்துக்கள்



பிரியாணி
மசாலாத் தோசை
நெய்த்தோசை
வெங்காயத் தோசை
இடியப்பப் பிரியாணி
பிட்டுப் பிரியாணி
சில்லிப் பறோட்டா
கொத்துறொட்டி
பறோட்டா

விசேட வைபவங்களுக்கு
ஓடர் செய்து கொடுக்கப்படும்.

(சி-6354)



021 224 4404, 077 408 1517

கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
(உப்புமடம் சந்திக்கும் இனுவில் சந்திக்கும் இடையில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிமோனியா...

புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கி ருந்து மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், நேற்று அதிகாலை 2.00 மணியளவில் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

உடையார்கட்டு பகுதியினை சேர்ந்த நிர்மலன் கபீஸ் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (4-7,9)

## போதை மாத்...

டுள்ளன.

மீட்கப்பட்ட போதை மாத்திரைகளின் பெறுமதி 16 மில்லியன் ரூபாய் என தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கடத்தல் பொருட்கள் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதுடன் இந்த நடவடிக்கையில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (4-7,9,285)

## ஆபத்தான...

ஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டம் ஆகியவற்றை அரசு கொண்டுவரும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பொதுஜன பெரமுன ஆட்சி சர்வாதிகார ஆட்சி இல்லை என்பதை அனைவரும் கவனத்தில்கொள்ள வேண்டும். நான் ஒரு கட்சியின் தலைவர். மொட்டு ஆட்சி சர்வாதிகாரமுடையது அல்ல

கட்சியுடன் பேசித்தான் கட்சி தொடர்பான நிலைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். எனினும், இதுபோன்ற மக்களுக்கும் ஊடகங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும் ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆதரவு வழங்கமாட்டாது எனத் தெரிவித்தார். (4-7,9)

## வடக்கில்...

நேற்று அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிட்டத்தட்ட 500 ஏக்கர் காணிகளை தனது கடன்களை சீர்செய்வதற்கு இரணைமடுவிற்கு தெற்குப் புறமாக சீனாவிற்கு வழங்குவதற்கான முழு முயற்சியையும் இலங்கை அரசு எடுத்திருப்பதாக நான் அறிகின்றேன்.

இரணைமடுவின் தெற்கு புறமாகவும், யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் எல்லையாக உள்ள இயக்கச்சி பகுதியில் மண்டலாய் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இருக்கின்ற கிட்டத்தட்ட 200 ஏக்கருக்கு அதிக காணியையும் சீன நாட்டுக்கு வழங்குவதற்காக அவர்கள் சில திட்டங்களை முன்னெடுத்திருப்பது அவர்களின் செயற்பாடுகளிலும், நடவடிக்கைகளிலும் தெரியவந்துள்ளது.

இலங்கையில் பல நிலப்பகுதிகள் இவ்வாறு நாடுகளிற்கு விற்கப்படுகின்றன. அதில் கூடுதலாக கடலை தரையாக்கி சீனாவிற்கு விற்றல், கடலோரங்கள் மற்றம் தரைகளை சீனாவிற்கு விற்கும் செயற்பாடுகளில் அரசு இறங்கியுள்ளது.

இந்தியாவிற்கு தான் நல்லபிள்ளை போன்று நடித்துக்கொண்டாலும், தன்னுடைய வேலைத்திட்டங்களை சீனாவை வைத்தே கையாளுகின்ற பெரும் யுத்திகளை இலங்கை அரசு கையாளுகின்றது. இது பிராந்திய வல்லரசு என்ற அடிப்படையிலும், இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ஈழத்தமிழர்களின் இருப்பு என்பதும் பெரிய அளவிலே பாதிப்புக்குள்ளாகும் நிலை இருக்கின்றது.

இரணைமடுகுளத்தின் தெற்கு பகுதியில் 500 ஏக்கர் காணிகளை சீனாவுக்கு வழங்குவதும், இயக்கச்சி பகுதியை அண்மித்து 200 ஏக்கர் காணியை சீன அரசுக்கு வழங்குவதற்கு இலங்கை அரசு எடுத்திருக்கின்ற முயற்சி மிகவும் அபாயகரமானது.

இந்த விடயத்தை நாங்கள் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கின்றோம். கிடைத்திருக்கின்ற தகவலின் அடிப்படையில் இரணைமடுவின் தெற்கு பகுதிக்கு மகாவலி திட்டத்தை கொண்டு வருதல், சிங்கள குடியேற்றங்களை கொண்டுவருதல் என்ற போர்வையில் பர்ரிய வேலைத்திட்டங்களிற்காகவும், நீண்டகால அடிப்படையில் தமிழ் மக்களுடைய இனத் தனித்துவத்தை இல்லாது செய்து ஓர் சிங்கள மயப்படுத்துகின்ற செயற்பாடுகளில் அவர்கள் முன்னின்று உழைக்கின்றார்கள் எனத் தெரிவித்தார். (4-7,9,100)

## பயங்கரவாத...

எனினும், பல்வேறு தரப்பினரும் விடுத்த கோரிக்கைகளை கருத்தில் கொண்டு பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் முன்வைக்கும் நடவடிக்கையை ஒத்திவைக்க தீர்மானித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த சட்ட மூலத்தை எதிர்வரும் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக அதனை ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் நீதியமைச்சர் தெரிவித்தார். (4-7,9)

## மு.வண்டியில்...

தொடர்ந்து, சாரதியும் வர்த்தகர் ஒருவரும் அவரை இறக்கியுள்ளனர்.

இந்த நிலையில் 1990 இலக்க நோயாளர் காவு வண்டியில் ஏற்ற அழைத்தபோது அவர் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டது.

குறித்த நபர் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகுதியை சேர்ந்த 51 வயதுடைய பெருமாள்சாமி சந்திரகுமார் எனும் ஒரு பிள்ளையின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-7,9,100)


## கடன் மறுசீரமை...

துடன் இணைந்து வருடாந்தம் நடத்தும் பருவகால மாநாட்டினை முன்னிட்டு இந்த அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

இலங்கைக்கான பிரதான கடன் வழங்குநர்களான ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தமது திட்டத்தை வெளியிட்வுள்ளன. (4-7,9)

### 16ஆவது ஐ.பி.எல் தொடர்

# குஜராத் அணி திரில் வெற்றி



பிரிமியர் லீக் கிரிக்கெட்டில் குஜராத் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப்பை வீழ்த்தியது. சுப்மன் கில் அரைசதம் விளாசி கைகொடுத்தார்.

இந்தியாவில் பிரிமியர் லீக் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் மோதுகின்றன.

நேற்று பஞ்சாப்பின் மொஹாலியில் நடந்த போட்டியில் ஷிகர் தவானின் பஞ்சாப் அணி, ஹர்திக் பாண்ட்யாவின் 'நடப்பு சம்பியன்' குஜராத்தை எதிர்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் தொடர்ந்து 5 சிக்சர் அடிக்கவிட்ட யாஷ் தயாள், குஜராத் அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

**தவான் 'ஷாக்'**

பஞ்சாப் அணிக்கு ஷிகர் தவான் (8), பிரப்சிம்ரன் சிங் (0) ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. பஞ்சாப் அணி 'பவர் பிளே' ஓவரில் 2 விக்கெட்டுக்கு 52 ஓட்டங்கள் எடுத்தது. இந்நிலையில் சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கானை அழைத்தார் ஹர்திக் பாண்ட்யா. இதற்கு கைமேல் பலன் கிடைத்தது. 24 பந்தில் 36 ஓட்டங்கள் எடுத்திருந்த ஷார்ட், ரஷித் கான் வீசிய 4வது பந்தில் போல்டானார்.

ராஜபக்ஷ, ஜிதேஷ் சர்மா இணைந்தனர். மோகித் சர்மா பந்தில் பவுண்டரி அடித்தார் ராஜபக்ஷ. தன் பங்கிற்கு ஷமி ஓவரில் இரு பவுண்டரி அடித்தார் ஜிதேஷ். இவர் 23 பந்தில் 25 ஓட்டங்கள் எடுத்த நிலையில், மோகித் 'வேகத்தில்' திரும்பினார். ராஜபக்ஷ 20, சாம் கர்ரான் 22 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

கடைசி நேரத்தில் ஷாருக்கான் (22 ரன், 9 பந்து) சற்று உதவினார். பஞ்சாப் அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 153 ஓட்டங்கள் எடுத்தது. குஜராத் சார்பில் மோகித் சர்மா 2 விக்கெட் வீழ்த்தினார்.

**சுப்மன் அரைசதம்**

குஜராத் அணிக்கு சகா (30), சுப்மன் கில் ஜோடி நல்ல ஆரம்பம வழங்கியது. சாய் சுதர்சன் 19 ஓட்டங்கள் எடுத்தார். ஹர்திக் பாண்ட்யா 8 ரன்னில் திரும்பினார். மனம் தளராமல் போராடிய சுப்மன், 40வது பந்தில் அரைசதம் எட்டினார். இது, இத்தொடரில் இரண்டாவது, பிரிமியர் அரங்கில் 16வது அரைசதம் ஆனது. சாம் கர்ரான் வீசிய கடைசி ஓவரில் குஜராத் வெற்றிக்கு 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முதல் பந்தில் மில்லர் ஒரு ஓட்டம் எடுக்க, அடுத்த பந்தில் சுப்மன் (67) போல்டானார். அடுத்த 2 பந்தில் 2 ரன் எடுக் கப்பட்டன. 5வது பந்தில் டிவாட்டியா பவுண்டரி அடிக்க, குஜராத் அணி 19.5 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்கள் எடுத்து, வெற்றி பெற்றது. மில்லர் (17), டிவாட்டியா (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக குஜராத் அணியின் மோகித் சர்மா தேர்வானார்.


**ENGLISH CLASSES**

ஆங்கிலம் சரளமாக பேச வைப்பதற்கும்
School books Grade 1 to A/L
உங்கள் வீடுகளிற்கு வந்து
கற்பித்துத் தரப்படும். (15253)

**076 232 1903**


66வது பிறந்தநாள்

# நினைவலைகள்



**தனேந்திரன்**
**நீலாதேவி** (பகவதி)

பிறப்பு: 14.04.1957
இறப்பு: 14.10.2021

நான் இவ்வுலகை விட்டுச்
சென்று ஈராண்டு ஆகின்றது.
என் உடல்தான்
அழிக்கப்பட்டதே தவிர எனது
உயிர் உங்களுடன் உறவாடிக்
கொண்டு இருக்கின்றது.
உங்கள் இன்பத்திலும்
துன்பத்திலும் நான் காவலனாக
இருப்பேன்.

(15257)

67/2, சீனிவாசன் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்: கணவன்
லயன் கலாநிதி நா.தனேந்திரன் J.P
(முன்னாள் மாநகர சபை உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்குண்டு



யாழ்ப்பாணம் புத்தூரில் பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து ½ km தூரம் புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன் நிலப்பரப்பு 74 பரப்பு காணி குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, நன்னீர் ஊற்று நிலப்பரப்பு, 3, 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

(15250)

தொடர்பு:-

**077 468 3354**
**076 911 9371**
**076 739 0413**



(காபற் மெயின் றோட்டுடனே முழு காணியும் உள்ளது)

# நீர்க்கசிவினை சீர்செய்வதற்கு

**Skyline** இன் இனிய
**சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

உங்கள் வீடுகள், கட்டடங்களின் மொட்டை மாடி, முகட்டுக்கூரை, வெளிப்புறச் சுவர், தண்ணீர்த்தொட்டி, நீரோடி வாய்க்கால், குளிய லறைகள், நீச்சல் தடாகம் போன்றவற்றில் ஏற்படும் நீர்க்கசிவு பிரச்சினைகளை சிறந்த இரசாயனம் மூலம் சீர் செய்து தரப்படும்.

HAPPY Tamil NEW YEAR

## Skyline Holders (Pvt) Ltd

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
Jaffna: 077 722 0095/076 663 6481/021 221 4994
Kilinochchi / Mullaitivu :- 077 741 4960
Vavuniya / Mannar : 077 279 0743
website: www.skylineholders.com | FB: skyline Holders

(15255)

# புத்தாண்டு வாழ்த்துக்கள்

## ஒற்றுமையாக வாழ்வோம்

பௌத்தமும் இந்து மதமும் வரலாற்று ரீதியாக இணைக்கப்பட்டவை. மறைக்கப்பட்டிருக்கும் இந்துக்களதும் பௌத்தர்களினதும் பெறுமதிமிக்க உறவை வெளிக்கொண்டு வந்து அனைவரும் அறிய வெளிப்படுத்துவோம்.

(15222)

**பௌத்த இந்து ஒற்றுமை**
ஸ்ரீ நாகவிஹாரா, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம். 077 663 0462

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட செயலாளர் நாயகமும் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும் சமர்தான நீதவானும் திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும் முன்னாள் வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவருமாகிய

அமரர் உயர்திரு. **பொன்னுத்துரை மதிமுகராஜா**

தோற்றம் 24.01.1948 — மறைவு 26.12.1998

அமரர் திருமதி **பொன் மதிமுகராஜா விஜயலட்சுமி**

தோற்றம் 15.12.1948 — மறைவு 15.03.2023

அவர்களின் நினைவாக இன்று (14.04.2023) கடற்றொழில் அமைச்சர் மற்றும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கௌரவ **K.N.டக்ளஸ் தேவானந்தா** மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் **வீ.ஆனந்தசங்கரி** அவர்களால் தாவடி வடபத்திரகாளி ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட தாவடி தெற்கு சனசமூக நிலைய நுழைவாயில் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டு 14.04.2023 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படும்.

(C-6360)

"ஸ்ரீமுருகபவனம்"
தாவடி வடக்கு, கொக்குவில்.

காலி வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06. 077 775 0312

தகவல்: பொன்.மதிமுகராஜா
விஜயகாந்த் 077 620 2077


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் மு.கவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.